36
1786

உ

பக்திரஸக் கீர்த்தனாமிர்தம்.



...OF THE REGISTRAR OF BOOKS
28 SEP 1933
MADRAS

திருவை T. S. சுவர்ணமையர், B. A.,
...ளால் இயற்றப்பெற்று,
...வதி விலாஸ மெஷின் பிரஸில்
...ப்பிக்கப்பெற்றது.

1933. [Price As. 3 only.

Q2:417
N33
76981.

உ

பக்திரஸக் கீர்த்தனாமிர்தம்.

OFFICE OF THE REGISTRAR OF

திருவை. T. S. சுவர்ணமையர், B. A.,
அவர்களால் இயற்றப்பெற்று,

பரமக்குடி சரஸ்வதி விலாஸ மெஷின் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

Rights Reserved] 1933. [Price As. 3 only.

சாற்றுக்கவிகள்.

பரமக்குடி இராஜா சேதுபதி ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிட்
பிரம்மஸ்ரீ: நா. ஐயாஸாமி ஐயரவர்கள் இயற்றியவை.

வெண்பா.

தென்னைமிகுந் திருவத்தேவ னூர்ச் சீர்மறையோன்
மன்னுகுமரன்றருள் மறவாதோ—னின்னிலத்தில்
சொன்னக் கவியெனும்பேர்த் தூயவா னன்குணர்ந்து
சொன்னதமிழ்த் தோத்திரத்தைச் சொல்.

அறுசீர்விருத்தம்.

சுப்பிரமணி ய[illegible] தோத்திரமாஞ் சுவைமிகுந்த
தூய [illegible]
இப்புவி[illegible]யார் துதித்தேத்த[illegible] கின்[illegible]ந்தவா விசைத்தமிழா
[illegible]லிசைத் தளித்தா[illegible]
தப்[illegible]தமொ[illegible]ன் றில்லாத சற்குண[illegible]ன் ஆங்கிலமுந்
தமிழுங் கற்றிரு[illegible]
றுப்ப[illegible]யு [illegible]ஞர்புகழ் திரு[illegible]கர் வாழ்சுவர்ண
[illegible]வையர் தானே.

784.0954

கோமல்,
A. வேங்கடசுப்ரமணிய ஐயரவர்கள் இயற்றிய,

வெண்பா.

வேலவனின் மேலன்பு மிக்குள சொர்ணக்கவியின்
பாலமிர்தப் பத்திரஸக் கீர்த்தனங்க—ளானுலகோர்
ஆனந்த முற்றின்ப வாரிதியி லாழ்ந்தெழுந்து
ஞானந் தவாதுறவார் நன்கு.

FOREWORD.

BY

Mr. M. RAJAH, B. A., (Hons.)

Paramakudy.

The need for a book of devotional songs in novel tunes was long felt by music lovers, and it is but proper that Mr. T. S. Swarnamaiyer has risen to the occasion. Through this book he has done the yeomen service of placing South Indian music within the easy access of one and all. Many of my friends and I have gone through the selection and enjoyed it hugely. In the fulness of time, the book will have its proper place among the famous works of renowned authors.

அபிப்பிராயங்கள்.

இராமநாதபுரம் சேது சமஸ்தான சங்கீத வித்வான்,

ஸ்ரீமான் C. S. சங்கரசிவம்.

T. S. சுவர்ணமையரவர்களாலியற்றப்பட்ட பக்திரஸக் கீர்த்தனாமிர்தத்தைப் பார்வையிட்டேன். அதிலுள்ள வர்ண மெட்டுக்கள் தற்காலத்திற்கு இசைந்தனவாயும் லய சம்பிரதாயத்தைத்தழுவியதாயும் ஒருங்கே அமைந்திருப்பதைப்பார்த்து அகமகிழ்ந்தேன். இத்தகைய பெரிய காரியம் முற்றுப்பெறுவதற்கு ஸ்ரீ ஷண்முகநாதன் கிருபை செய்வாராக.

T. S. சுவர்ணமையர் இயற்றிய இதிலுள்ள கீர்த்தனங்களை, நான் ஹார்மோன்யத்தில் வாசித்தும், வாயால் பாடியும் பார்க்க இராகம் தாளம் முதலியவை நன்கு அமையப்பெற்று இனிய தற்கால வர்ணமெட்டுக்களாலாகியிருப்பதால், இப் புத்தகத்தை யாவரும் ஆதரிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

(Sd.) A. S. தனராஜ் முதலியார்,

ஹார்மோனிஸ்ட், சிதம்பரம்.

இந்நூலில் தோன்றும் கவிகளெல்லாம் எளிய தமிழ் நடையும், புதிய வர்ணமெட்டுக்கள் அடங்கியுள்ள தாயுமிருக்கின்றன. தற்கால முறைப்படி சங்கீத வித்வான்களாலும் நாடக மேடை நடிகர்களாலும் பாடப்பெற்ற வர்ணமெட்டுக்கள் அடங்கியுள்ளதாயுமிருக்கிறபடியால் இதை யெல்லோரும் சிரமமின்றி படிக்கவோ அல்லது பக்க மேளங்களுடன் பாடவோ சௌகரியமாயிருக்குமென்று திட்டமாய்ச்சொல்லுகிறேன்.

(Sd.) P. S. வேலுச்சாமி,
கொலம்பியா ஆர்டிஸ்ட்,
பரமக்குடி.

பிழை திருத்தம்.

பக்கம்.	பாட்டு.	வரி	பிழை.	திருத்தம்.
6	தேவா	6	தினமாளவா	தினமெனையாள்
8	திருச்செந்தூரா		பல்லவியின் மூன்றுவது வரியை அநுபல்லவியின் மூன்றுவது வரியாகக்கொள்க.	
12	தேடிவந்தேனே	18	செஞ்கிரம்	செஞ்சிரம்
26	செந்தூர்	3	கொண்டி	கொண்டு

உ சிவமயம்.

ஸ்ரீ ஷண்முகன் துணை.

பக்திரசக்கீர்த்தனுமிர்தம்.

விநாயகர் துதி.

இராகம் பியாக்கடை.] [தாளம் சாப்பு.

(சிவனுமைசுதவிநாயகா—என்ற மெட்டு)

பல்லவி

கழல்கள் போற்றினேன் கஜமுகதேவா
வல்லபை பாகா
கருணை கொண்டென்னைக் காத்திடவாவா
கணபதியே மூவா. (கழ)

அநுபல்லவி

கவிகள் செப்பிடக் கருதினேனின்று
களைந்திடவேண்டும் பிழைகள் யாவுமின்று
கற்பககணேச மூர்த்தியே
காசினி யேற்றும் உந்தன் கீர்த்தியே (கழ)

சரணம்

சுருதி ஆதிநூல்கள் தொழுதுபோற்றுமுதல்வா
சுந்தர தேகா
சுதினமின்றென்னை ஆண்டிடவாவா
சுடர்முக்கண் தேவா
சூரரைக்கொன்ற சுப்ரமண்யனை
தொழுதுபாடிடும் சுவர்ணக்கவியினை
பூரணக்கிருபை வைத்துத்துணை செய்ய
போற்றினேன்தினம் எற்றினேன் கமல (கழ)

கலைமகள் துதி.

இராகம் அமீர்கல்யாணி] [தாளம் ஆதி

(தினகரகுல தேவதி என்ற மெட்டு)

பல்லவி

நாமகளே நான் முகன் பாரி — நாரி காயத்திரி
நமஸ்கரித்தேன்

அநுபல்லவி

பூமகளாலே போற்றிடும் மானே
ஏற்றினேனே
காத்தருள் தேனே (நாம)

(தொகையறா)

பூவென்ற வெண்கமலம் பொலிந்துறையும் வாணியே
புன்னகையே புரிராணியே தேவலோகமுழுவதும்
நாமகள் உந்தனை போற்றிடுவர்தினமும் பேணியே

(பாட்டு எடுப்பு)

சுப்ரமண்யனின் புகழ்துதிக்கும் சுவர்ணக்கவி
தூய்மை பெறவே தாயே அருள்வாய் (நாம)

ஷண்முகன் துதி

இராகம் இந்துஸ்தான் பியாக்] [தாளம் ஏகம் & ஆதி

(இராமமூர்த்திக்கிணையான தெய்வம் என்ற மெட்டு)

பல்லவி

கந்தவேளுக்கிணையான தெய்வமிக்
காசினியிலுண்டோ ஞான (கந்த)

அநுபல்லவி

எந்தப்புத்தேளிரும் வந்தனை செய்திடும்
எங்கும் நிறைந்த சரவணனும்
சிந்தனை செய்வோர் பவந்தனைப் போக்கிடும்
எங்கள் உமைதன் எழில்சுதனும்
சங்கரனார் திருப் பாலனுமான (கந்த)

சரணங்கள்

சூராதி சூரரை போரில் மடிவித்த
துங்கவனே அவன் கம்பீரனே
சுரர்கள் அவரைக்கண்டு தொழுதுபாடிநின்று
துன்பங்கள் யாவுமே நீங்கினார்
தூயதெய்வயானை மாதினையவர்க்கு
நேயமனைவியாயாக்கினார் ஞான (கந்த)

தூயனாகச் சூட்டும் சுவர்ணக்கவிமாலை
தோளிலும் வேலிலுஞ் சூட்டலாம்—அவன்
சொந்தக்காரனென்றும் பாராட்டலாம்—என்றும்
தாய்மைசெய்வான் யென்பாட்டெல்லாம் ஞான (கந்த)

இராகம் தசராகமாலிகா] [தாளம் ரூபகம்

பல்லவி

1 எனக் கேதாரம் ஆவாய் வேலா
இன்றுன்னை நின்றுவணங்கினேன்
கன்றுபோல் நின்றுகலங்கினேன் (என)

அநுபல்லவி

மனக்கவலைகள் மாற்றிடுவாயே—ஒரு
மாத்திரைக்கால மதாகிலும்
எத்திட நீ கிருபையேயருள் (என)

சரணங்கள்

2 சினந் தோடிப் போகலாமோ
சிறுவ னெந்தனை நோகலாமோ
சிகிவாஹன மீதிலேறி
சேர்ந்துனை யென்றும்வணங்கிட
ஈந்திடு உன திரு தெரிசனம் (என)

3 வள்ளியாம் கல்யாணியை
வனந்தேடி மணந்த வேடா
புள்ளிமயில் இல்லையோடா
புன்னகையோ டென்முன் வாடா (என)

4 அய்யனே உமக்குகந்த அட்டாணா
ஆகும்திவ்யராகம் கேட்பாய் ஷடானனா
மெய்யன்போ டென்னை மேன்மைப் படுத்துவாய்
மேதினிதனில் யாதொருவித
தீதணுகாது பாதுகாவெனை (என)

5 கானத்திற்கேற்ற காம்போதி ராகம்
களிப்புடனே கேட்டுக்களைவீர் என்சோகம்
வானவர்களும் போற்றிடும் யோகன்
வள்ளிதெய்வானை மகிழ்ந்திடும்
புள்ளி மயில் மீது ஊர்ந்திடும் (என)

6 காவியத்திற்கேற்ற கமாஸ் ராகப்பிரியா தூயா
பாவியெந்தனை வந்து பாதுகாவாயா
பரங்கிரியு லுறைந்திடுமென்
பாலமுருகையா மெய்யா (என)

7 மோனநிலைதரும் மோஹனப்பிரியா
முக்தி அளித்திடும் சக்தியின் சேயா
ஞானநிலை யெந்தனுக்குத் தந்தாளய்யா
வேளையே கேளய்யா ஆளய்யா (வேளை)
இப்போதே (என)

8 பிரியம்விளைவிக்கும் பியாக்கு ராகம்
பேறுவகையோடு கேட்பாய் ஆறுமுகம்
சிறியனானுமே செல்வமிகப்பெற
உரிமையுடனே உந்தனைவேண்டினேன் (என)

9 பூரிதமேதரும் பூரிகல்யாணி
பூஷணமாகவே புன்னகையோடணி
நேரிதாகவே சுவர்ணக்கவியினை
நீடூழி வாழவே நீ பரிபாலிப்பாய் (என)

10 சுந்தரமானநல் சுருட்டிராகம்
வந்துகேட்பீரய்யா துய்யா (சுந்)
சிந்தனை செய்திடும் சிறியன் சுவர்ணக்கவி
தீவினையாவுமே நீங்கவே பாவினையென்றுமே
ஓங்கவே (என)

இராகம் கமாஸ்] [தாளம் ஆதி

(காமி சத்யபாமா என்ற மெட்டு.)

பல்லவி

சுவாமிமலைசுப்ரமண்யா துதிசெய்தேனேநான்
துதிசெய்தேனேநான் தூய்மைபெறவேதான் எந்தன் (சுவாமி)

அநுபல்லவி

காமியாய்க் கெட்டலைந்தேன்
கவலைகள் பட்டுநைந்தேன்
சுவாமிஎந்தனை வந்து கா
வந்துகா வந்துகா வந்துகா எந்தன் (சுவாமி)

சரணம்

அக்ரமங்கள்செய்திடும் அசுரரை அழித்திட்ட
சக்திவேலோனே என்முன்வா
என்முன்வா என்முன்வா என்முன்வா எந்தன் (சுவாமி)
சுரர்கள் அனவரதம் துதிக்கும் வள்ளிலோலனே
சுவர்ணக்கவிக்கருள் சீலனே
சீலனே வேலனே மூலனே எந்தன் (சுவாமி)

இராகம் தேசிகத்தோடி] [தாளம் ஆதி

(நானே ஏவினேன் என்றமெட்டு)

பல்லவி

தேவா ஷண்முகா திகழ்திருமால் மருகா (தே)
அநுதினமே உனையே துதியே பரவினேன் (தே)

அநுபல்லவி

தினைப்புனம்நாடி குறவள்ளிமணஞ்சூடி
திருத்தணிமேவியகுஹா திவ்யகோலமாய்த்
திருத்தணிமேவியகுஹா தினமாளவா (தே)

சரணங்கள்

கலியுகதேவா காத்திடவாவா
கணமுனைமறவாத அடியேனை ஆண்டிடவா
கமழ் கடம்பா (தே)

சுடர்ஒளிமேனி துரிதமுடனே வாநீ
துலங்கும் சுவர்ணக்கவியை யாள்
அவன் கவிகேள் (துல)
தூய நாயகனே (தே)

இராகம் தேசிகத்தோடி] [தாளம் ஆதி

(ஆண்டவன் தெரிசனமே என்ற மெட்டு)

பல்லவி

ஆதரித்திடவருவாய்—சிகிபீதேறி
நாதனே நலமருள்வாய் (ஆத)

அநுபல்லவி

கோதறுவள்ளி தெய்வானை கொஞ்சுமணாளனே
தீதணுகாம லென்னையாள் திருமால் மருகா
தேவர்கள் தொழும் முருகா (ஆத)

சரணம்

சூராதி சூரர்களை போரினில் மடிவித்த
வீராமயூரவனேவா விதரணையாய்
வேண்டும் சுவர்ணக்கவியைக் கா (ஆத)

இராகம் நோட்] [தாளம் ஏகம்

(சிட்டு ஆட்டத்தில் ஓர் நாள் என்ற மெட்டு)

குன்றுதோறும் நின்றுலாவும் குமரவேலனே
கோதைவள்ளி தெய்வானை மகிழும்லோலனே
கூவிடும் சேவலா தேவர்காவலா
குழந்தைவடி வேலனே செந்தமிழ் நாவலா

(தொகையறு)

கூத்தாடு மயி லனே

பாட்டு

கோதிலாத சுவர்ணக்கவிக் கருளும்சிலனே

இராகம் கமாஸ்] [தாளம் ரூபகம்

(தாமதமேன் தாளை நீ திரவாய் என்ற மெட்டு)

பல்லவி

திருச்செந்தூரா தேசிகா முருகா
செங்கண்மாலின் மருகா (திரு)
கருத்திலுந்தனை கருதினேன் வாவா (திரு)

அநுபல்லவி

வருத்தமதனைப் போக்கவா வள்ளலே வடிவேலவா
திருத்தணிகை மேவுங்கந்தனே (திரு)

சரணம்

வானவர் உனை தினம் பணிவார்
வடிவழகா உந்தனிருபேர்
வதனங்களை எந்தனுக்குநேர்
வனப்பமுறவே தயவாய்ச்சேர்
வளப்பமிகு இப்பாடலை எல்
வணங்கிடு சுவர்ணக்கவிபாடல்
இணங்கிநீ ஏற்றுக்கொண்டருளுவாய் (திரு)

இராகம் ஆனந்தபைரவி] [தாளம் ஆதி

(ஆதார மெனக்கார் என்ற மெட்டு.)

பல்லவி

காங்கேய குஹனே கார்த்திகேயனே
கருதி னேனுனை என்
கவலைகள் களைந்திடும் (காங்)

அனுபல்லவி

வேங்கை மரமானவா
வேடுவ வள்ளியை தேடி மணந்தவா
வேளே வந்துதவ வா (காங்)

சரணங்கள்

வெற்புகள் தோறும மைந்திடு தேவனே
கற்புடை வள்ளி தெய்வானை மணாளனே (காங்)

வேதத்தால் நாதத்தால் பஞ்ச பூதத்தால்
கீதத்தால் துதி பெறும் (காங்)

விண்டலமும் மண்டலமும் எண்டிசை புகழ்ந்திடவே
பெண்டு பிள்ளைகளுடனே பேரு வகையடைந்திடவே (காங்)

வினைகள் யாவும் நீக்கும்
துணைகளதி கரிக்கும்
மனவுறுதியாக்கும்
மரண பயம் போக்கும்
நினைவுனை நோக்கும் நாளெல்லாம்
இந்நாளெல்லாம் முன் நாளெல்லாம்

சூர ராதியர்கள் தேவராதி யரை
வேரறுத்திடவே கோரிப் பகைத்தகாலை
துலைத்து உலைத்து சிதைத்தாய் அசுரரை
பலத்துடன் சுவர்ணக் கவியினை காத்திடும் (காங்)

இராகம் செஞ்சுருட்டி] [தாளம் ஆதி

(ஆவினன்குடி முருகா என்ற மெட்டு.)

பல்லவி

குன்றக்குடியின் வேலனே
கோலா கலனே (குன்)

அனுபல்லவி

குன்று தோறுடும் கோனே
குஹனெனும் நாமத்தானே
    கோமள தேக யோகனே
    குறத்தி பாகனே (குன்)

சரணங்கள்

கூவுங் கொடிச் சேவலா
தேவர் படைக் காவலா
    கோரினேன் சேவை ஆவலாய்
    தமிழ் நாவலா (குன்)
சூது வாதுகள் நீக்கி
சுவர்ணக் கவியை மேலாக்கி
    ஓதுவி தமிழைசீர் தூக்கி
    ஓல் காப்புகழ் தூக்கி (குன்)

இராகம் பிம்பிளாஸ்] [தாளம் ஆதி

(கோரிபஜிந்துணு என்ற மெட்டு.)

பல்லவி

திருக்கழுக்குன்றாரனே திவ்யமயில்வீரனே
  தெய்வயானை லோலனே வா வா (திரு)

அநுபல்லவி

வெறுக்கும்படியான தீக் கருக்குழியில் இனிமேல்
நெருக்குண்டுழலும் வினை தீரும் (திரு)

சரணங்கள்

தருக்கள் செழித்திலங்கும் தெருக்கள் எழில்விளங்கும்
தவமுயர் தணிகையின் வேலா
        தீர வீரா
        சூர சம்ஹாரா
நாரணனரின் மருகா
நலமருள் நற்றமிழ் கற்றுவைக்க சுவர்ணக்கவிக்கே வாவா (திரு)

இராகம் பியாக்] (தாளம் ஆதி

(அதிருஷ்டம் வந்திட்டபோது என்ற மெட்டு.)

பல்லவி

குருபரசரவண கோமளதேகா
குன்றக்குடியில்மேவும் குஹா ஷண்முகா (குரு)

அநுபல்லவி

ஒருபுரம் வள்ளியும் மற்றொருபுரம் தெய்வானையும்
அருகிலமர்ந்திருக்கும் அதிருஷ்டயோகா (குரு)

சரணங்கள்

பாலாபிஷேகயோக பழனிமலைவேலா
நாலாகலைநூல்களுக் கனுகூலா
ஞாலம் கொண்டாடும் கிருபா
வேலையானவா உன்னை
சாலவுந் தொழுதேனே சீலனேவா (குரு)

சூலமுடனேபடை நாலுமுடையோய்
நீலமயில்வாகன மாகக்கொண்டோய்
சீலனே உன்புகழைச் செப்பும் சுவர்ணக்கவியை
ஞாலங்கொண்டாடும்படி நலமருள்வாய் (குரு)

இராகம் தேசிகமுகாரி] [தாளம் ஆதி

(தேடி வந்தேனே வள்ளி மானே என்ற மெட்டு.)

பல்லவி

தேடி வந்தேனே உம்மை நானே
நாடி நமஸ்கரித்து தானே முருகோனே (தே)

மகுடங்கள்

சித்த மதிலுனை மெத்தவும் நினைத்து
நித்த முந்தனை பக்தியாய்த் துதித்துத் (தே)

தித்தித்திடு தேனும் தினைமாவும்
உத்தம உந்தனுக் கித்தின மளித்திடத் (தே)

சக்தி வேலைக்கையில் தாங்கிடு சீலனே
முக்தி அளித்திட வேண்டிய பாலனே (தே)

தேவர் முதல் யாவர்களின் பாவவினை போக்கி வைத்த
தேவ தேவா உந்தன் திரு சேவடி வணங்கி இன்று (தே)

சிவன் சுதனே அறுமுகனே
திருமால் மருகனே சரவண பவகுஹனே (தே)

தத்தளாங்கு தக தரிகிட தகஜுனு
தளாங்கு தொம் தளாங்கு தொம் என நட மிட்டுத் (தே)

தத்திருகிடுத தித்திருகிடுத தொம்திருகிடுத
நம்திருகிடுத

ததிங்கிணத்தொம் ததிங்கிணத்தொம்
என நடமிடு மயிலோனே (தே)

தஞ்ச மென்றுந்தனை கெஞ்சிக் கூத்தாடியே
வஞ்சனை நீங்கிட செஞ்சிரம் வணங்கியே (தே)

அநுபல்லவி

கோடி நமஸ்காரமே கூறினே னின்னேரமே
கோதிலாத சுவர்ணக் கவியினை
பாது காக்கப் பாவடி பாடியே (தே)

இராகம் செஞ்சுருட்டி] [தாளம் ஏகம்

(வாங்க வாங்க லவுண்டிகளா என்ற மெட்டு.)

பல்லவி

வாருங்கள் வாருங்கள் பக்தர்களா—எங்கள்
வள்ளல் முருகரை தெரிசித்தீர்களா
போங்கள் போங்கள் உன் மத்தர்களா—எழில்
பூவையர்கள் ஆசை கொண்ட பித்தர்களா
பூவையர் களாலே இப் பூவுலகின் மேலே
புண்ணிய மென் கண்டீர்—வீண்
பூரிதமே கொண்டீர்
புண்ணியம் விரும்பினுலே பூரண மனதினுலே
எண்ணித்துதி செய்தாலே எங்கள் கந்த வள்ளலாரை
என்னேர முந்துதிப்பீர் நீர் பன்னகமுமே மிதிப்பீர்
செல்லும் செல்லும் திருச்செந்தூரு செல்லும்
திருத்தணிகை செல்லும் திருப்பரங்குன்றம் செல்லும்
தீவினைகள் வெல்லும்
திவ்ய சுவர்ணக்கவி சொல்லும் சொல்லும்
சொல்லும் சொல்லும் (வா)

இராகம் அமீர்கல்யாணி] [தாளம் ஏகம்

(தருவேனே எனதாசை மாதநியே என்ற மெட்டு)

பல்லவி

வருவீரே மயில்மீதே
வடிவேலரே என்முன் (வரு)

அநுபல்லவி

தருவீரே வேண்டும்வரம்
குருபரனே சரவணனே
தந்தைக்குபதேசம் விந்தையாய்ச் செய்திட்ட
கந்தய்யா உந்தனை சிந்தனை செய்திட்டேன் (வரு)

சரணங்கள்

பாலாபிஷேகனே பழனிமலை வாழ்பவனே
பண்டாரமாகிய தண்டாயுதா உன்னைக்
கொண்டாடியே துதி யென்றும் பரவுவேன் (வரு)
சுந்தரி வள்ளிதெய்வானை சிந்தைமகிழ் நாயகனே
சுந்தரமான சுவர்ணக்கவிமாலை
உந்தனின் கந்தரந் தன்னி லணிந்திட (வரு)

இராகம் தேசீகத்தோடி] [தாளம் ஆதி ௴ ஏகம்

(நாயகரே எங்கள் ஞானகிருபாகரரே என்ற மெட்டு)

பல்லவி

தாரகனே தயாபரனே குஹனே (தா)

அநுபல்லவி

சூரனைக்கொன்றதிரு சுப்ரமண்யனே தீரனே
நாரணனுர்க்குகந்த நன்மருகா என்முருகா (தா)

சரணங்கள்

ஆரணங்கை மீனாம்பிகை தன்சுதனே (தா)
வாரணமாயிரங்கள் வாழ்ந்திடும் வரையுடையோய்
தோரணங்கள் துலங்கும் தாயதணிகாசலனே
தோரணையாய்ப்பாடும் சுவர்ணக்கவியைநாடுந் (தா)

இராகம் ஜெயமனோஹரி] [தாளம் ரூபகம்

(நீ பக்தி பாக்யசுதா என்ற மெட்டு)

பல்லவி

திருப்பரங் குன்றின் தேவா
திகழ் ஆறுமுக வேலவா (திரு)

அநுபல்லவி

மருப்பொசித்த மால்மருகா
விருப்புடன் என் முன்வருக (திரு)

சரணம்

வெறுப்பென் பதகற்றியென்றும்
வீணன் என்னைக் காத்திடுவாய்
சுரும்பமர்பூந் தொடையுடையாய்
சுவர்ணக்கவிக் கருள் கொடையா (திரு)

இராகம் ஆனந்தபைரவி] [தாளம் ஆதி

(மானுருட்டும் கண்ணழகி என்ற மெட்டு)

(தொகையறு)

காவடிகள் தாங்கியே நல் பாவடிகள் பாடிவரும்
தேவனடி பரவிடும் உம் சேவடி வணங்குவேனே

பாட்டு எடுப்பு.

செவ்வேளின் பக்தர்களா நீவிர் திவ்யமனத்தர்களா
உய்ய நினைத்தீர்களா என்றும் மெய்யே உரைத்தீர்களா
கையோடு கைகோர்த்து கந்தவேளையே துதித்து
பையப்பைய நடந்துபோவோம் பஜனைப்பாக்கள்
பாடியென்றும்
பரம பக்தர்களா நீர் பாங்கான சித்தர்களா—இன்று
பாடிடும் சுவர்ணக்கவி பகர்ந்திடும் என்றும்புவி

இராகம் தேசீக துரிஞ்சி] [தாளம் ஆதி

(உனைநான்விட்டு அகலேனென்றும் என்ற மெட்டு)

பல்லவி

புள்ளிருக்கு வேளூர்வளர் புனிதமுருகோனே
தெள்ளியதேனும் தினை மாவுந்தின்றோனே
ஒள்ளியவார் வேலினைத்தன் கையிற்கொண்டோனே (புள்ளி)

கண்ணிகள்

சித்துக்கள்பலபுரிந்த முத்துக்குமரனே
நத்தினின் பதமலரை நானும் பற்றினேன்
அத்திமுகனுற்கிளைய ஆறுமுகனே
பக்திசெய்வோர்க் கெல்லாம்ஹிதம் தான்புரிவோனே (புள்ளி)
சுரர்கள்யெல்லாம் துதிகொண்டாடி உன்னைநாடவே
சுவர்ணக்கவி யும்கலந்துன் புகழைப்பாடவே
தீயவையெல் லாம்அவனை விட்டுஓடவே
திண்ணியசெல் வங்களெல்லாம் அவனைநாடவே (புள்ளி)

இராகம் பிலஹரி] [தாளம் ஏகம்

(எக்குலத்தி லேயுதித்தாய் என்ற மெட்டு.)

பல்லவி

ஆறுமுக வள்ளலேநீர் தேருதல் எனக்குச்சொல்வீர்
அய்யா முருகையா (ஆறு)

அநுபல்லவி

ஆற்றுவா ரொருவரில்லை
ஆற்ருண்ணுந்தா யெந்தன் தொல்லை மெய்யா (ஆறு)

சரணம்

பேருதவி செய்யவேணும் பார்வதியின் பாலகனே
சீலா வள்ளி லோலா
சீர்பெற்றுச் சிறந்திடச்
சிரங்குவித்தேன் சுவர்ணக்கவிக் கோனே (ஆறு)

இராகம் அமீர்கல்யாணி] [தாளம் ஏகம்

(அருட்கடல் ஞானநந்தம்ததும்புதே என்ற மெட்டு)

பல்லவி

கலியுக தெய்வமே கந்தனேவந்தாள்
கலிநீங்கிட கடையேன் பணிந்தேனின்தாள்

அநுபல்லவி

சலியாது நின் அருள் தந்தருள் பரம்பொருள்
சாலோக சாரூப சாமீபம் தா (கலி)

சரணம்

சூராதியரைக்கொன்ற தீரனே
சுயம்பிரகாச சுப்ரமண்ய வீரனே
துதிசெய்தேன் நின்புகழ் சுவர்ணக்கவித்தமிழ்
சோர்வின்றி வேருன்றி தோன்றிடவே (கலி)

இராகம் பியாக்] [தாளம் ஏகம்

(பக்தா நந்தா தயாளா பரமேசா என்ற மெட்டு)

பல்லவி

செந்தூரம் பதியில்மேவும் தேசிகனே முருகா
செங்கண்மாலின்மருகா தெய்வானை தன் நாயகா (செ)

அநுபல்லவி

சேவற்கொடியோனே உந்தன் சேவடிபணிந்தேன்
தீவினைகள் யாவும்நீக்கும் தீனதயாளனே (செ)

சரணம்

சந்தர வேலுடையோய் சுவர்ணக்கவியையுடையோய்
மந்திர தந்திரமுடையோய் செந்தமிழுக்கருளுடையோய் (செ)

இராகம் செஞ்சுருட்டி] [தாளம் ஏகம்

(தேரிலேரி மாரன் விட்டானே அம்பு என்றமெட்டு)

பல்லவி

காண நானும் வேணும் கதிர்காமனை
வேணவையெல்லாம் நல்கும் வெற்றிவேலனை (கா)

அநுபல்லவி

தோணிலேன் ஒன்றுமே வீணிலே யென்றுமே
துன்பப் படலானேனே அய்யனே (கா)

சரணம்

வேணும் வேணும் நின்னருள் வேதவெற்பனே
தோணவேணும் உன்பக்தி தோகைமயிலனே
சோணசைலனின் ஜோதிப்புதல்வனே
சுவர்ணக்கவி சிலனுக்கனுகூலனே (கா)

[இராகம் கமாஸ்] [தாளம் ஆதி

(ஸிஸ்மேதேரா ஹைறவேஸ நம்மா என்ற மெட்டு)

பல்லவி

செந்தில்மேவும் கந்தவேளே
வந்தருள எந்தனை வாதே னின்நாளே (செந்)

அநுபல்லவி

செந்தமிழ்க்குருமுனிக்குகந்து உபதேசம் செய்தாய் (செந்)

சரணம்

இந்தநாளே வந்துயென்னை சிந்தைமகிழச் செய்வாய்
சேவித்தேனுன்னை
சொந்தமுடனே பைந்தமிழை
வந்து சுவர்ணக்கவிக்கு நீ ஈந்திடு (செந்)

[இராகம் பியாக்] [தாளம் ஆதி & ஏகம்

(என்னுசை கண்மணிகாள் என்ற மெட்டு)

பல்லவி

கண்டி கதிர்காமனே கழுகாசலனே
கருணை நிதியே யென்னைக் காத்திடுவாய் (கண்)

அநுபல்லவி

காத்தல் பாரமா மா கடவுளின் பூமா (கண்)

சரணம்

காலமெல்லாமுனைத்துதிக்கக் கடாக்ஷம்செய்குவாய்
சீலன் சுவர்ணக்கவிக்குகந்து செவியே சாற்றுவாய் (கண்)

இராகம் பியாக்] [தாளம் நபகம் & ஏகம்

(என்னரும் கண்மணியை என்ற மெட்டு)

பல்லவி

என்னரும் கந்தவேளே இன்னுங்காணேன்
என்ன செய்வேன் (என்)

அனுபல்லவி

ஏதுசெய்வேன் எவ்வாறுய்வேன்
ஏழைநான் என்செய்வேனே (என்)

சரணங்கள்

காலைமுதல் மாலைவரை
கத்திபக்தியாய்த் துதித்தேன்
வேலைத்தாங்கும் கையா
எந்தன் வேள்முருகையா மெய்யா (என்)

சோலைகள் மலிந்திலங்கும்
சுவாமிமலை மேவுந்தூயா (சோ)
சுவர்ணக்கவி தோத்தரிக்கும்
சுப்ரமண்யனே கம்பீரா (என்)

இராகம் இந்துஸ்தான் பியாக்] (தாளம் ஆதி

(வார நாரே தும்பர் என்ற மெட்டு.)

பல்லவி

வேலவரே உம்மை வேண்டிப்பணிந்தேன்
ஆண்டருள் எந்தனை (வே)

அநுபல்லவி

நீலமயில்மீ தமர்ந்திடு தேவனே
காலபாசம் நீக்கும் கந்தனே பிரபந்தனே
ஆலவாய் அம்பதி அம்பிகை சுதனே
காலதாமதமின்றி காத்திடு மெந்தனை (வே)

சரணம்

சுவாமிநாதா நீதா துரிதமாய் என்குறை
தீர்க்கவொண்ணுதா (சுவா)
காமி எனக்குக் காக்ஷி கொடுத்திடுவீரே
நேமி நெடுமால் திருமருகரே முருகரே
பூமி சுவர்ணக்கவியைப் புகழ்ந்திடவே சிவ
காமி அம்மைதரு செல்வக்குமாரரே (வே)

இராகம் இந்துஸ்தான் பியாக்] [தாளம் ஆதி

(ஜாவுரேதேரே பையாத்துஹோறாஜு என்ற மெட்டு.)

பல்லவி

கார்த்திகேயா கமழ் கடம்பனே காவாய் (கா)

அநுபல்லவி

கடம்பனே காவாய் அருள்
திடந்தந் தென்னை ஆளாயோ (கா)

(தொகையறு)

கீர்த்திப்பிரதாபனே கிரியெலாம் மேவிடும்
மூர்த்தியாய் வந்த முதல்வா
பூர்த்தியாய் வாமருள் புரிந்திட இன்றுமே
நோற்றனே சிறுவன் உம்மையே

(பாட்டு யெடுப்பு)

சீர்த்திமேவிடும் தில்லை திகழ்
சுவர்ணக்கவி சொல்லை
நேர்த்தியாய் கேட்டு யென்னை
காத்திட வேணுமய்யா (கார்)

இராகம் இந்துஸ்தான் பியாக்] [தாளம் ஆதி

(எனதாருயிரே அண்ணு வாரும் என்ற மெட்டு,)

பல்லவி

செந்தூர்க்கந்தா சிவனுர் மைந்தா
சிறுவனென்னை காக்க சீக்கிரம் வந்தாள் (செ)

அநுபல்லவி

சிந்தனை நொந்தேன் தேவா உனை நினைந்தேன்
வந்தென்னை யாண்டிட வணங்கியுனைப் பணிந்தேன் (செ)

சரணம்

சுருதி ஆதி வேதங்கள் துதித்துனைப்பாட
சுவர்ணக்கவிமாலை நின்தோளினில் ஆட
கருதியுனைப்பணிந்தேன் கவலைகள் மறந்தேன்
காத்தருள்வதுன்பாரம் கடிதில்யென்முன்னேவாரும் (செ)

இராகம் தரிஞ்சி] [தாளம் ஆதி

(சிவதீ க்ஷாபரு என்ற மெட்டு.)

பல்லவி

குஹனே கோதிலா குருபரனே (குஹ)

அநுபல்லவி

கூவுங்கொடிச்சேவலா வா வா
அருள் தா தா குண நீதா (குஹ)

சரணம்

கோதை வள்ளிதெய்வானை கொஞ்சுமணாளனே
கோதறு சுவர்ணக்கவி கேளும்
எந்நாளும் அருளும் (குஹ)

இராகம் அமீர்கல்யாணி] [தாளம் ஏகம் & ஆதி

(அதம்கே முல்கேயே கரோஹு என்ற மெட்டு)

பல்லவி

பாலாபிஷேக யோக பஞ்சாமிர்தா
செஞ்சேவலா (பா)

அநுபல்லவி

சீலாவள்ளிமகிழும் லோலா ஜெகம் புகழும் (பா)

சரணங்கள்

வேலாயுதக்குமரா வேடனே திகழ் அமரா
நாலாகலைகளுக்கு நாயகனே தாயகனே
நீலமயில்மீதேறும் நேமியேதிகழ் சுவாமியே
காலமெல்லாம் உன்னைப்போற்றினேன் சர்வ (கா)
காலமெல்லாம் உன்னைநான் கண்டுதெரிசித்திடுவேன் (பா)

(தொகையறு)

காலாதி காலனே காவடி கொள் சீலனே
கதிர்காம தேவ தேவனே
மாலாதி தேவரும் மதித்திடும் யோகனே
மறைபுகழும் உம்பர் கோனே.

(பாட்டு எடுப்பு)

நாலாவித மலரால் நல்குவேன் மாலையுமக்கே
கோலாகலமுடனே குழவி சுவர்ணக்கவியினையாளும் (பா)

இராகம் கானவாருதி] [தாளம் ஆதி

(சரசி என்னை மருவிடவா என்ற வர்ணமெட்டு).

பல்லவி

முருகா என்னை அருள் தினமே திரு (முரு)

அநுபல்லவி

திருவேரகம் உரைந்திடுவோய்
தேவ தேவனே காவாய் எந்தனை
செந்திலம்பதியில் வந்து துலங்கிடும்
கந்தவேளே உன்னை வந்தனை செய்தனன் (முரு)

சரணம்

வருவாய் என்முன் அருள் தாவே (முரு)
குருவாய் அரர்க்குபதேசம் செய்தாய்
கோதை வள்ளி தெய்வானை மணாளனே
கொஞ்சமும் நெஞ்சினில் வஞ்சமில்லாமலே
தஞ்சமென்ற சுவர்ணக்கவியினைக் காத்திடு (முரு)

இராகம் ஹரிகாம்போதி] [தாளம் ஆதி

(மோகம் பொல்லாது என்ற மெட்டு)

பல்லவி

ஆள என் வாது ஆறுமுகனே ஒது என்னை (ஆள)

அநுபல்லவி

தாளடிகள் பணிந்தேன் நாளும்முனைத்தொழுது
தாளமத்தளமுடன் மேளவாத்தியமுடன் (ஆள)

சரணம்

கோபம் கொள்ளாதீர் கோரும் எந்தனைத்தள்ளாதீர் (கோ)
கோடிக் கும்பிடுகளே நாடியளித்தேனின்று
வாடி வதங்கிநின்றேன் மோடிசெய்யலாகுமோ (ஆள)

சூதுமேதீது சுவர்ணக்கவிகேட்டிடுதப்பாது (சூது)
சோலைமருவிடும் சுவாமிமலைவளரும்
மாலை அணிந்ததிரு மால்மருகா முருகா (ஆள)

இராகம் இந்துஸ்தான் காபி] [தாளம் ஏகம் & ஆதி

(ஈதென்ன ஞாயம் ஈதென்ன மாயம் என்ற மெட்டு.)

பல்லவி

சுவாமிமலை சுப்ரமண்யா துதிசெய்தேன்
தூய கண்யா (சுவா)

அநுபல்லவி

சிவகாமி அம்மைத்திருப் பாலனே
தெய்வயானைமகிழ் லோலனே (சுவா)

சரணம்

சுரர்பரவும் தூய சீலா
சுவர்ணக் கவிக்கனுகூலா
திறமுடனே தினைப்புனத்தில்
தேடி வள்ளியை மணந்த லோலா (சுவா)

இராகம் நடன பைரவி] [தாளம் ஆதி

(அன்பே உமைப்பிரிந்தேனே என்ற மெட்டு.)

பல்லவி

கந்தா உன் மைந்தன் என்னை
வந்தாளுவாய் என்முன்னே (கந்)

அநுபல்லவி

கங்கையின் திருமைந்தா
காங்கேயன் என்னும் கந்தா (கந்)

சரணங்கள்

ஆண்டலைக் கொடியுயர்ந்தோன்
ஆறுமுகம் அமைந்தோன்
தாண்டவம் செய்வோன் தனையன்
தணிகாசலத்தி லுரைவோன் (கந்)

சுவர்ணமயில் வாகனா
தூயவள்ளி தெய்வானை கொழுநா
சுவர்ணக் கவிமாலை சூடும்
துரிதமுடனென்னை நாடும் (கந்)

இராகம் கமாஸ்] [தாளம் ஆதி

(மருலுகொன்னுதிரா என்ற மெட்டு,)

பல்லவி

பரங்கிரிமேவிடும் பண்டிதா ஷண்முகா (பா)

அநுபல்லவி

இரங்காதேன் நெஞ்சமென்மேல்
இயம்புவீர் எந்தலே (பா)

சரணம்

காங்குவித்தேனே சுவர்ணக்
கவியும் பாவினேனே (பா)

இராகம் பியாக்] [தாளம் ஆதி

பெண்கள் நாயகமே என்ற மெட்டு)

பல்லவி

செந்தூர்க்கந்தனே நின்
சேவடிதனைப்போற்றினேன்
பாவடிகொண்டி ஏற்றினேன் (செ)
வந்தாளெந்தனை பெரும் வள்ளலே உனது அருள்
தெள்ளிதாய்த் தந்தருளினி (செ)

அநுபல்லவி

வள்ளிதெய்வானை மனமகிழ் லோலா
புள்ளிமயில்மீது ஆரோகணிக்கும்சீலா
ஒள்ளிய வேலினைக்கையில் கொண்டமூலா
ஒருதரம் உன்பெயரை ஓதிட்டால் ஓடிடும்பாவம் (செ)

சரணம்

சுந்தரதேகனே கொடுஞ்
சூரரை வதைத்தவனே மாரனையே ஒத்தவனே
சூதுகள் வாதுகள் போக்கிடும் வேலா
சுவர்ணக்கவியைச் சொந்தமாக்கிடும் சீலா
தீதுகள் அணுகாமல் நோக்கிடும் மூலா
தினமும் உனதுநாமம் மனதிலிருக்கவேணும் (செ)

இராகம் பியாக்] [தாளம் ஆதி

கோடித்தவம் செய்து பெற்ற என்ற மெட்டு.

பல்லவி

ஆதரிப்பதா ரெந்தனை அய்யனே முருகையா
துய்யா மெய்யா பன்னிருகையா (ஆத)

அநுபல்லவி

ஆபத் பாந்தவனே அனுதாரக்ஷகனே (ஆத)

(தொகையரு)

அமரர்கள் யாவரும் அசுரரின் கொடுமையால்
அடைக்கலம் புகுந்தார் உம்மை
சமரசுர சங்காரா வுன்தாளடி போற்றினேன்
தற்காத்திடுமே யென்னை

பாட்டு எடுப்பு

சுமையாகுமோ எனை ஆளுதல்
சொல்வீர் சீர்தூக்கி என்னை நோக்கி மேலாக்கி துன்பங்கள் நீக்கி
சுடர்ஒளி உனையே துதித்திடும் சுவர்ணக்கவியினையே (ஆத)

இராகம் நடபைரவி] [தாளம் ஏகம்

(சரண கமல விமல நமல என்ற மெட்டு.)

பல்லவி

ஜனன மரண பிணிகள் போக்கும் சீலனடி
சக்தியுமை பாலனடி (ஜன)

அநுபல்லவி

ஜனனுகூலனடி சத்ருசங்காரனடி
தரணிதனில் இவரைப்போலே தா தா யாரடி (ஜன)

சரணம்

சுதிலயனுடன் துலங்கும் சுவர்ணக்கவியின்பாட்டு
தொல்லுலகில் யாரும் கேட்டு
மதியும் விளங்கப்பெற்று மால்மருகன் கிருபையும்பெற்று
மங்களமே எங்குமுற்று எங்கள் கந்தன் பாதம் போற்று (ஜன)

இராகம் அமீர்கல்யாணி] [தாளம் ஆதி

(குல ஹார்தம் தேபர் வரதி காருஹை என்ற மெட்டு.)

பல்லவி

வாழுவர் மானிலத்தில் மாந்தர்கள் யாவரும் இன்புற்று (வா)

அநுபல்லவி

சூழ்புகழ் சுவர்ணக்கவிசொல் கீர்த்தனமிர்தம்
துலங்கக் கொண்டாடியே
சுப்ரமண்யன் கிருபையே கொள்வோம்
சுபகர பல்கியே (வா)

இராகம் காப்பி] [தாளம் ஆதி

(மங்களம் சேர் இந்தியாவில் என்ற மெட்டு.)

கண்ணிகள்

வாழுவரே மானிடர்கள் வள்ளல் கீர்த்தனமிர்தம்
வாங்கி வாசித்தோரும் அதைக்கேட்டவரும் (வா)

76981

நாளும் நலம் எய்திடுவர் நாட்டிற்கு நலம் செய்திடுவர்
வேள்முருகர் பூரணகிருபை எய்திடுவர் (வா)

சுரர்களைப்போல் துன்பம் நீங்கி தூயபுகழைத்தாங்கி
சுவர்ணக்கவி [illegible]மென் மேலும்ஓங்கி (வா)

சுபம்! சுபம்!! சுபம்!!!

இப்புத்தகம் கிடைக்குமிடம் :—

T. S. சுவர்ணமையர், B. A.,

2/37, மேலச்சத்திர அக்ரஹாரம்,

பரமக்குடி. (S. I. RY.)